□□□□□□□□□□□□□□□ □□□□□:□□42□□□□ □□□□□□□□□: □2□□□□□□□□ □□□□□□□□□□2010□□□



உதவித் திட்டங்களில் உணவு

உணவு தான் உயிர்காக்கும் மருந்து

“உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தோர்'' என்பது உணவு வழங்குவதன் உயர்வைக் குறிக்க சொல்லப்பட்ட தத்துவமாகும். “தனி ஒரு மனிதனுக்கு உணவு இல்லையேல் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்பது எவரும் பசியால் வாடாமல் இருப்பதை உறுதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்தி தேசிய கவி பாரதி உதிர்த்த உணர்ச்சி வாக்கியம். உலகில் உள்ள அனைவருக்கும் அவர்கள் எதிர்பார்த்த மற்றவை கிடைக்கிறதோ இல்லையோ உணவு கண்டிப்பாக கிடைக்கவேண்டும் என்பதை உலகில் உள்ள தத்துவ ஞானிகள், கவிஞர்கள் என அனைவருமே வலியுறுத்தியிருப்பார்கள். ஏனெனில் உணவுதான் உயிர்காக்கும் மருந்து! இந்த உன்னத தத்துவத்தை உணர்ந்திருக்கும் இந்திய அரசு, பல்வேறு உதவித் திட்டங்களின்கீழ் ஏழை மக்களுக்கு உணவு வழங்கி வருகிறது. எந்த உதவித் திட்டத்தின் கீழும் பயன் பெறாத மக்களுக்காக பொது விநியோகத் திட்டத்தை செயல் படுத்தி வருகிறது. ஏழை மக்களின் பசி தீர்க்கும் இத்திட்டங்கள் குறித்த கண்ணோட்டமே இந்தக் கட்டுரை.

பொது விநியோகத்திட்டம்

இந்தியாவில், பொது விநியோகத் திட்டம் உருவானதே சுவையான கதை. போர்க்காலங்களின்போது அத்தியாவசியப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படும் என்பதால், அனைவருக்கும் தடையின்றி உணவு வழங்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டதுதான் பொது விநியோகத் திட்டம். போர்க்காலங்களில் மட்டுமே செயல்படுத்தப்படும் இத்திட்டம், பின் மூட்டை கட்டி வைக்கப்பட்டு விடும். அதன்பின் 1960களில் இந்தியாவில் கடுமையான உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டபோது, கிராமப் புறங்களில் உள்ள மக்களுக்கு ஓரளவாவது உணவு கிடைத்தது. நகர்ப்புறங்களில் உள்ளவர்களுக்கு உணவு கண்ணில் கூட படவில்லை.

அந்த நேரத்தில் நகர்ப்புறங்களில் உள்ள மக்களுக்கு அத்தியாவசிய உணவு தானியங்களை வழங்க பொது விநியோகத் திட்டம் தொடங்கப்பட்டது. அப்போது கூட தற்காலிகத் திட்டமாகத் தான் இது தொடங்கப்பட்டது. ஆனால் பல்வேறு காரணங்களால் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுக் கொண்டே சென்றது. இதனால் நகர்ப்புற மக்களுக்கு தடையின்றி உணவுப் பொருட்கள் கிடைத்ததுடன் வெளிச்சந்தையில் உணவுப் பொருட்களின் விலை கட்டுக்குள் இருந்தது. மறைந்த பிரதமர் இந்திரா காந்தி ஆட்சி காலத்தில் பசுமைப் புரட்சி செயல்படுத்தப்பட்டதன் பயனாக இந்தியாவில் உணவு உற்பத்தி அதிகரித்தது. இதனால் அனைத்து தரப்பினருக்கும் தாராளமாக உணவுப் பொருட்கள் கிடைக்கும் நிலை ஏற்பட்டது. இதனால் பொது விநியோகத்திட்டம் நிறுத்தப்பட்டு விடும் என்று பல்வேறு தரப்பினரும் எதிர்பார்த்தனர். ஆனால் மத்திய அரசோ அதற்கு நேர் எதிராக ஒரு முடிவை எடுத்தது. பசுமைப் புரட்சியின் பயனாக மத்திய அரசின் தொகுப்புக்கு அதிக அளவில் உணவுப் பொருட்கள் கிடைத்ததால், அத்திட்டம் மேலும் பல பகுதிகளுக்கு நீட்டிக்கப்பட்டது. தொடக்கத்தில் நகர்ப்புறங்களில் மட்டுமே செயல்பட்டு வந்த இத்திட்டம் பின்னர் மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகளுக்கும், அதிக வறுமை நிலவும் பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. அதன்பின் இந்தியா முழுவதும் இத்திட்டம் பரவலாக்கப்பட்டது.

பொது விநியோகத்திட்டத்தின்படி அனைவருக்கும் மலிவு விலையில் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் போன்றவை பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உணவுப்பொருட்கள் ஆகும்.

பொது விநியோகத் திட்டத்தில் மாற்றம்

பொது விநியோகத்திட்டத்தின் கீழ் அனைத்து தரப்பினருக்கும் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டதால், அதன் பெருமை சில பிரிவினருக்கு, குறிப்பாக பணக்காரர்களுக்கு புரியவில்லை. சற்று வசதி படைத்தவர்கள் இத்திட்டத்தின் கீழ் உணவுப் பொருட்களை வாங்கவில்லை. இதனால் அவர்கள் பெயரில் உணவு பெற்றுக் கொள்ளப்பட்டு விட்டதாக கணக்கு காட்டிய நியாயவிலைக் கடைமுகவர்கள், அந்த அரிசியை கடத்திச் சென்று வெளிச்சந்தையில் விற்பனை செய்து லாபம் பார்த்தனர். இதையறிந்ததும்தான், நரசிம்மராவ் பிரதமராக வந்தபின் பொது விநியோகத் திட்டம், சீரமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டமாக மாற்றப்பட்டது. இப்புதிய திட்டத்தின்படி ஏழை மக்கள் அதிகம் வாழும் தொலைதூர பகுதிகளுக்கு இத்திட்டம் நீட்டிக்கப்பட்டது. இந்தியா முழுவதும் மொத்தம் 1775 ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

ஏழை மக்களுக்கு குறைந்தவிலையில் உணவுப் பொருட்கள் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கம் என்பதால், ஏழை மக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் புதிய நியாய விலைக் கடைகள் தொடங்கப் பட்டன. பொதுமக்கள் அதிக தூரம் செல்லாமல் வீடுகளுக்கு அருகிலேயே உணவுப் பொருட்களை பெற வசதி செய்யப்பட்டது.

இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத்திட்டம்

சீரமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்திலும் முறை கேடுகள் நடந்ததையொட்டி.அத்திட்டத்தில் மேலும் பல மாற்றங்கள் செய்யப்பட்டு, இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொதுவிநியோகத் திட்டம் என்ற புதியத் திட்டம் 1997ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. முழுக்க முழுக்க ஏழை மக்களுக்கு சேவை செய்வதுதான் இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். இத்திட்டத்தில் முறைகேடு எதுவும் நடந்துவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்த மத்திய அரசு, இத்திட்டத்தின் பயன் பெறுவதற்கான விதிகளை கடுமையாக்கியது. இத்திட்டத்தின் கீழ் உணவுப் பொருட்களை குறைந்த விலையில் பெறத் தகுதியுடைய குடும்பங்களை தேர்வு செய்யும் பொறுப்பு மாநில அரசுகளிடம் வழங்கப்பட்டது. அதன்படி வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு மட்டுமே இத்திட்டத்தின் கீழ் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. 1997ம் ஆண்டில் இத்திட்டம் தொடங்கப்பட்டபோது இந்தியா முழுவதும் 6 கோடி குடும்பங்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தேர்வு செய்யப்பட்டன. அக்குடும்பங்களுக்கு வழங்குவதற்காக ஆண்டுக்கு 2 லட்சம் டன் உணவுப் பொருட்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. அதன்பின் படிப்படியாக உணர்ந்த பயனாளிகளின் எண்ணிக்கை 2000 வது ஆண்டுப்படி 6 கோடியே 52 லட்சம் குடும்பங்களாக உயர்ந்தது. இதற்கு இணையாக இத்திட்டத்தின்படி வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவும் ஆண்டுக்கு சுமார் 80 லட்சம் டன்னாக உயர்ந்தது.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவுப் பொருட்களுக்கு மத்திய அரசின் விற்பனை விலையிலிருந்து கிலோவிற்கு 50 காசு தள்ளுபடி தரப்பட்டது. அதன் பின் உணவுப் பொருட்களை மக்களிடம் கொண்டு சென்று சேர்ப்பதற்கு ஆகும் செலவைச் சேர்த்து நியாய விலைக்கடை உணவுப் பொருட்களுக்கான விலையை மாநில அரசுகள் நிர்ணயித்தன. எனினும் ஏழை மக்கள் உணவுக்காக அதிகம் செலவிடக்கூடாது என்று நினைத்த தமிழக அரசு, வெகு காலத்திற்கு இத்திட்டத்தின் கீழ் ஒரு கிலோ 2 ரூபாய் என்ற விலையிலேயே அரிசியை விற்பனை செய்தது. இடையிடையே அரிசிவிலை கிலோ 3.50 என்ற விலைக்கு உயர்ந்தபோதிலும், 2006ம் ஆண்டில் அரிசி விலை கிலோ ரூ.2 ஆக குறைக்கப்பட்டது. பின்னர் இது கிலோ ரூ.1 என மேலும் குறைக்கப்பட்டது. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத்திட்டம் ஏழை மக்களுக்கு மட்டுமானதுதான் என்ற போதிலும், வறுமைக் கோட்டிற்கு மேல் வாழும் மக்களுக்கு இத்திட்டத்தின்படி வழங்கப்பட்டு வந்த அரிசி, கோதுமை போன்ற உணவுப்பொருட்கள் நிறுத்தப்பட்டு விடவில்லை. மாறாக அவர்களுக்கு ஏழை மக்களுக்கு வழங்கப்படும் விலையை விட சற்று அதிக விலையில் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. எனினும் தமிழ்நாட்டைப் பொறுத்த வரை வறுமைக் கோட்டடிற்கு கீழ் உள்ள மக்கள், வறுமைக்கோட்டிற்கு மேல் உள்ள மக்கள் ஆகிய இரு தரப்புக்கும் ஒரே விலையில்தான் உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. 1997ம் ஆண்டில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத்திட்டம் தொடங்கப்பட்டபோது ஒரு குடும்பத்திற்கு 10 கிலோ மட்டுமே உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. ஆனால் 2000வது ஆண்டிலிருந்து இந்த அளவு 20 கிலோவாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

பயனாளிகளின் தேர்வு

இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தின்படி ஏழை. மக்களுக்கு மட்டுமே உணவுப் பொருட்களை வழங்குவது என மத்திய அரசு முடிவுசெய்தது. இதையடுத்து ஏழை மக்களை எப்படித் தேர்வு செய்வது என்ற வினா எழுந்தது. இதற்காக புதிதாக கணக்கெடுப்பு நடத்தினால், மக்கள் மத்தியில் அதிருப்தி எழலாம் எனக் கருதிய அரசு, ஒவ்வொரு மாநிலத்திலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்வதாக பதிவு செய்யப்பட்டிருந்த குடும்பங்கள் அனைத்தும் ஏழைக் குடும்பங்களாக கருதப்பட்டு, அவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்க முடிவு செய்யப்பட்டது. பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான இந்த உத்தியை, மத்திய திட்டக்குழு சார்பில் பொருளாதார வல்லுனர் பேராசிரியர் லகடவாலா தலைமையில் அமைக்கப்பட்டக் குழுதான் வகுத்துத் தந்தது.

அந்தியோதயா அன்னயோஜனா

வறுமைக்கோட்டிற்கும் கீழ் உள்ள மக்களுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது விநியோகத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருட்கள் வழங்கப்படுவதைப் போல, ஏழையிலும் ஏழைகளாக இருப்போருக்கு உதவ கொண்டுவரப்பட்ட திட்டம்தான் அந்தியோதயா அன்னயோஜனா திட்டம் ஆகும். இந்தத் திட்டம்



2000வது ஆண்டில்தான் தொடங்கப்பட்டது. 1990களின் இறுதியில் நடத்தப்பட்ட தேசிய மாதிரி கணக்கெடுப்பில் இந்திய மக்கள் தொகையில் 5% பேர் ஒரு நாளைக்கு இரு வேளை உணவு கூட சாப்பிட வழியில்லாமல் உறங்குவதாக தெரிய வந்தது. இதையடுத்துதான், மிக வறிய நிலையில் உள்ள அம்மக்களுக்காக அந்தியோதயா அன்ன யோஜனா திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. முதல் கட்டமாக ஒரு கோடி குடும்பங்களுக்கு இத்திட்டம் தொடங்கப்பட்டது. அப்போது ஏழைக் குடும்பங்களுக்கு மாதம் 25 கிலோ அரிசி / கோதுமை வழங்கப்பட்டது. பின்னர் இது 35 கிலோவாக உயர்த்தப்பட்டது. ஒரு கிலோ அரிசி ரூ.3க்கும் ஒரு கிலோ கோதுமை ரூ.2க்கும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

உதவித்திட்டங்கள்

மத்திய அரசின் பல்வேறு திட்டங்களின் மூலமும் ஏழை மக்களுக்கு இலவச அரிசி மற்றும் கோதுமை வழங்கப்படுகிறது. மதிய உணவுத் திட்டம், கோதுமை சார்ந்த சத்துணவு திட்டம், நல அமைப்புகளுக்கு உணவுப் பொருட்களை வழங்கும் திட்டம், அன்னபூர்னா திட்டம், வளர் இளம் பெண்களுக்கான சத்துணவுத் திட்டம், விடுதிகளுக்கான உணவு வழங்கும் திட்டம், நெருக்கடி நிலை உணவுத்திட்டம் ஆகியவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை ஆகும். அவற்றைப் பற்றி விரிவாக பார்ப்போம்...

மதிய உணவுத்திட்டம்

பள்ளிகளுக்கு வரும் மாணவ, மாணவியரின் எண்ணிக்கையை அதிகரித்தல், தக்க வைத்துக் கொள்ளுதல், குழந்தைகளின் நுண்ணூட்டச் சத்து நிலைகளை உயர்த்துதல் ஆகிய நோக்கங்களுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் முதன்முறையாக 1996ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ம் தேதியன்று இந்தியாவின் 2408 வட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளில் மட்டும் தொடங்கப் பட்டது.

அதன்பின் 1997 - 98ம் ஆண்டில் இத்திட்டம் நாடு முழுவதும் உள்ள அனைத்து தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. அதன்பின் இத்திட்டம் நடுநிலைப்பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டத்திற்காக பள்ளி நிர்வாகங்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு கடந்த சில ஆண்டுகளாக குறைந்து வந்தது. ஆனால் கடந்த இரு ஆண்டுகளாக இத்திட்டத்தின் கீழ் பெறப்படும் உணவுப் பொருட்களின் அளவு அதிகரித்து வருகிறது. 10வது ஐந்தாண்டு திட்டத்தின் முதல் ஆண்டில் (2002-03) இத்திட்டத்திற்கு 18.84 லட்சம் டன் உணவுப் பொருட்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. அவற்றில் 13.75 லட்சம் டன் அரிசி, 7.45 லட்சம் டன் கோதுமை என மொத்தம் 21.20 லட்சம் டன் உணவுப் பொருட்கள் பெறப்பட்டன. 2003-04ல் 26.80 இலட்சம் டன் உணவுப் பொருட்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. அதில் 13.49 லட்சம் டன் அரிசி, 76.2 லட்சம் டன் கோதுமை என 20.59 லட்சம் டன் உணவுப் பொருட்கள் பள்ளிகளால் பயன்படுத்தப்பட்டன. இது 2004-05ம் ஆண்டில் 21.33 லட்சம் டன்னாகவும், 2005-06ம் ஆண்டில் 17.24 லட்சம் டன்னாகவும், 2006-07ம் ஆண்டில் 16.55 லட்சம் டன்னாகவும் படிப்படியாக குறைந்தது. எனினும் 11வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இத்திட்டத்திற்காக பெறப்படும் உணவுப் பொருட்களின் அளவு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. 11வது ஐந்தாண்டு திட்டத்தின் முதல் ஆண்டான 2007-08ம் ஆண்டில் 14.41 லட்சம் டன் அரிசி 3.95 லட்சம் டன் கோதுமை என மொத்தம் 18.36 லட்சம் டன் உணவுப் பொருட்கள் பெறப்பட்டன. பின்னர் 2008-09ம் ஆண்டில் இது 20.19 லட்சம் டன்னாக உயர்ந்தது. 2009-10ம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் மட்டும் 16.92 லட்சம் டன் உணவுப் பொருட்கள் இத்திட்டத்திற்காக பெறப்பட்டுள்ளன. கடைசி 3 மாதங்களுக்கு பெறப்பட்ட உணவையும் சேர்த்தால், 2009-10ம் ஆண்டிலும் அதற்கு முந்தைய ஆண்டை விட அதிக அளவு உணவுப் பொருள் மதிய உணவுத் திட்டத்திற்காக பெறப்பட்டிருக்கும். இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் மத்திய, மாநில அரசுகளுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும், அனைவருக்கும் கல்வி வழங்க வேண்டும் என்ற மத்திய அரசின் கொள்கைக்கு இத்திட்டம் மிகவும் ஆதரவாக அமைந்திருக்கிறது. எனவே இனிவரும் ஆண்டுகளிலும் இத்திட்டம் தொடர்வது உறுதி.

நல அமைப்புகளுக்கு உணவுப் பொருட்கள் வினியோகம்

ஏழை மக்களுக்கும், ஏழைகளிலும் ஏழை மக்களுக்கும் உணவுப் பொருட்களை வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது வினியோகத்திட்டம், அந்தியோதயா அன்ன யோஜனாத்திட்டம் போன்றவை செயல்படுத்தப்படும் நிலையில், இவர்களை விட மிக மோசமான நிலையில் இருக்கும் வீடற்ற ஏழைகள் மற்றும் பிற திட்டங்களில் பயனடையாத ஏழை மக்களுக்கு உதவுவதற்கான திட்டம்தான் இதுவாகும். இத்திட்டத்தின்படி ஆதரவற்ற ஏழை மக்களை பாதுகாக்கும் தொண்டு நிறுவனங்கள், அரசு சாரா அமைப்புகள் போன்றவற்றிற்கு குறைந்த விலையில் அரிசி, கோதுமை போன்றவை வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டம் கடந்த 2002-03ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. மத்திய அரசின் உணவுத் தொகுப்பில் கடந்த சில ஆண்டுகளாக உணவுப் பொருட்களின் கையிருப்பு திருப்திகரமாக இல்லை என்பதால் இத்திட்டத்தை நிறுத்திவிடலாம் என மத்திய அரசுக்கு பரிந்துரைகள் வழங்கப்பட்டன. ஆனால் ஆதரவற்ற மக்களுக்கு பயனளிக்கும் இத்திட்டத்தை நிறுத்தக் கூடாது என மத்திய அரசு முடிவு செய்து உள்ளது. எதிர்காலத்தில் இத் திட்டத்தை விரிவுபடுத்தவும் மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

விடுதிகளுக்கு உணவு வழங்கும் திட்டம்

ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவ, மாணவியர் தங்கிப்பயிலும் மாணவர் விடுதிகளுக்கு மானிய விலையில் அரிசி/கோதுமை வழங்குவதுதான் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் 1994ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அறிமுகம் செய்யப்பட்ட போதிலும் 2001-02ம் ஆண்டு தான் இது நடைமுறைக்கு வந்தது. இந்த திட்டத்தின்படி ஏதேனும் ஒரு விடுதியில் ஒட்டுமொத்த மாணவர் எண்ணிக்கையில் மூன்றில் இரு பங்கினர் ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர்களாக இருந்தால், அவர்களில் ஒவ்வொரு மாணவருக்கும் மாதத்திற்கு 15 கிலோ எனக்கணக்கிட்டு அரிசி/கோதுமை வழங்கப்படும். இதற்கு மானியவிலை வசூலிக்கப்படும்.

அன்னபூர்னா திட்டம்

65 வயதைக் கடந்த ஆதரவற்றோர் மற்றும் முதியோர் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் பயனடையாதோருக்கு உதவும் வகையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி ஆதரவற்ற ஏழைகள் அனைவருக்கும் மாதம் 10 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2001-02ம் ஆண்டில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது. எனினும் பல்வேறு நடைமுறை சிக்கல்களின் காரணமாக அதற்கு அடுத்த ஆண்டிலிருந்தே இத்திட்டம் மாநில அரசின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டுவிட்டது.

இத்திட்டத்தின்படி ஆதரவற்ற மக்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு பத்தாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில் அதிகரித்த போதிலும், 11வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் குறைந்து வருகிறது. இத்திட்டப்படி 2002-03ம் ஆண்டில் 53 ஆயிரம் டன் அரிசி, 62 ஆயிரம் டன் கோதுமை என மொத்தம் 1 லட்சத்து 15 ஆயிரம் டன், உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இது 2003-04ம் ஆண்டில் 1.9 லட்சம் டன்னாகவும் 2004-05ல் 1.32 லட்சம் டன்னாகவும் 2005-06ம் ஆண்டில் 1.39 லட்சம் டன்னாகவும் உயர்ந்தது. எனினும் 10வது ஐந்தாண்டின் கடைசி ஆண்டான 2006-07ம் ஆண்டில் இது 90 ஆயிரம் டன்னாக குறைந்துவிட்டது. பின்னர் 11வது ஐந்தாண்டு திட்டத்தின் முதல் ஆண்டான 2007-08ல் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உணவுப் பொருட்களின் அளவு ஒரு லட்சம் டன் ஆக உயர்ந்தது. 2008-09ல் இது மீண்டும் 95 ஆயிரம் டன்னாக குறைந்து விட்டது. 2009-10ம் ஆண்டின் முதல் 9 மாதங்களில் மொத்தம் 61 ஆயிரம் டன் உணவுப் பொருட்கள் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன.

வளர் இளம்பெண்களுக்கான நுண்ணூட்ட சத்துணவுத் திட்டம்

11வயது முதல் 19 வயது வரை உள்ள பெண்களில் நுண்ணூட்டச்சத்துக் குறைபாடுகள் பெண்களுக்கு சத்துணவு வழங்கும் நோக்குடன் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டத்தை 2002-2003ம் மற்றும் 2003-2004ம் ஆண்டில் சோதனை அடிப்படையில் மத்தியத் திட்டக்குழு தொடங்கியதும் இத்திட்டத்தின் கீழ் 11 வயது முதல் 19 வயது வரை உள்ள பெண்களில் எவரேனும் 35 கிலோவுக்கும் குறைவான எடை இருந்தால் அவர்களுக்கு மாதம் ஆறு கிலோ இலவச அரிசி / கோதுமை தருவதுதான் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்படி பயன் பெறும் பெண்களின் எடை 35 கிலோவை தாண்டிவிட்டால் அவர்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்கள் நிறுத்தப்படும். இத்திட்டத்தை முதலில் தொடங்கிய மத்தியத் திட்டக் குழு இரு ஆண்டுகள் மட்டுமே செயல்படுத்திவிட்டு, பின்னர் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையிடம் ஒப்படைத்து விட்டது. இந்தியாவிலுள்ள பெரிய மாநிலங்களில் முறையே இரு பின் தங்கிய மாவட்டங்கள், சிறிய மாநிலங்களில் அதிக மக்கள் தொகை கொண்ட ஒரு மாவட்டம் என மொத்தம் 51 மாவட்டங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நெருக்கடி நிலை உணவுத் திட்டம்

இத்திட்டம் தேசிய அளவில் செயல்படுத்தப்படவில்லை. ஒரிசா மாநிலத்தில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது. ஒரிசா மாநிலத்தில் வாழும் வயது முதிர்ந்த, ஆதரவற்ற, நலிவடைந்த மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு வழங்கும் நோக்குடன் இத்திட்டம் கடந்த 1995-96ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அப்போது ஒரிசா மாநிலத்தின் 5 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டத்தின்கீழ் 45, 141 பேர் பயனடைந்தார்கள். தற்போது இத்திட்டம் ஒரிசா மாநிலத்தில் பொலாங்கீர், கலஹந்தி, கோரப்புட், மல்காங்கிரி, நவரங்பூர், நௌபாடா, ரயகடா, சோனிப்பூர் ஆகிய 8 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 2 லட்சம் பேர் பயனடைகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உணவு மானியம்

இந்தியாவின் மக்கள் தொகை அதிகரித்து வருவதற்கு ஏற்ப, பொது வினியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவும் அதிகரித்து வருகிறது. எனவே அதற்கேற்றார் போல உணவு மானியத்தையும் அதிகரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. பொது வினியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அரிசி, கோதுமை உள்ளிட்ட உணவுப் பொருட்கள் குறைந்தபட்ச ஆதரவு விலைத்திட்டத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படுகின்றன. ஆனால் குறைந்தபட்ச ஆதரவு விலையை விட மிகக் குறைந்த விலைக்கே விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் ஏற்படும் இழப்பை தவிர்க்கவே மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரத் துறைக்கு மத்திய அரசு உணவு மானியம் வழங்கி வருகிறது. உதாரணமாக பார்த்தால் 2004-05ம் ஆண்டில் ரூ.630 ஆக இருந்த ஒரு குவிண்டால் கோதுமையின் குறைந்தபட்ச ஆதரவு விலை தற்போது ரூ.1,080 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதேபோல், அரிசியின் கொள்முதல் விலை ரூ.560லிருந்து ரூ.1,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் இவற்றின் விற்பனை விலை இன்றுவரை உயர்த்தப்படவில்லை. உணவு மானியம் அதிகரித்து வருவதற்கு இதுவும் ஒரு காரணம் ஆகும். 2004-05ம் ஆண்டில் ரூ.25,746 கோடியாக இருந்த உணவு மானியம் 2005-06ம் ஆண்டில் ரூ.23,071கோடியாகவும், 2006-07ம் ஆண்டில் 23,828 கோடியாகவும், 2007-08ம் ஆண்டில் ரூ.31,260 கோடியாகவும், 2008-09ம் ஆண்டில் ரூ.43,668 கோடியாகவும் உயர்ந்திருக்கிறது. 2009-10ம் ஆண்டில் 10.02.2010 வரை மொத்தம் ரூ.54,539 கோடி மானியம் வழங்கப்பட்டிருக்கிறது.

உணவுப் பாதுகாப்புச் சட்டம்

உண்ண உணவு, உடுத்த உடை, குடிக்க குடிநீர் ஆகிய மூன்றும்தான் மனிதர்களின் அடிப்படைத் தேவையாகும். இவற்றில் முதல் தேவையை நிறைவேற்ற அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் எண்ணிலடங்காதவை. உணவுப் பொருட்கள் கொள்முதல் மற்றும் வினியோகத்திற்காக இந்தியாவில் உள்ள கட்டமைப்பு வசதிகள் உலகிலேயே மிகவும் பெரியதாகும். இதனால் இந்தியாவில் உணவில்லாததால் பட்டினி என்ற நிலை படிப்படியாக குறைந்து வருகிறது. வெகு விரைவில் உணவுப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்படவிருக்கும் நிலையில் அச்சட்டத்தினால் இந்தியாவின் சில மூலை முடுக்குகளில் காணப்படும் பசியும் பறந்து போகும் என்பது உறுதி.